# வட ஆற்காடு ஜில்லா 2-வது

# சு. ம. மகாநாடு.

## நிறைவேறிய தீர்மானங்கள்.

(நமது நிருபர்)

ஆம்பூர், நவ. 29-

வடஆற்காடு ஜில்லா 2 வது சுயமரியாதை மகாநாட்டின் முற்பகல் நடவடிக்கை திங்கட்கிழமை வெளியிட்டிருக்கிறோம். இன்று பிற்பகல் நடவடிக்கை வெளியிடுகிறோம்.

பிற்பகல் நடவடிக்கை.

பகல் போஜனத்திற்குப் பின் மீண்டும் மகாநாடு கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

தீர்மானங்கள்.

1. சுயமரியாதை இயக்கத்துக்கு இன்றியமையாத் தூண்போலிருந்து பார்ப்பனக் கொடுமைகளைக்களைந்தெரிய அஞ்சாது போராடிப் போர்புரிந்த தன்மானத் தொண்டர்களுக்குத் துணை செய்து தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்ப இயக்கத்தலைவர் ஈ. வெ. ராமசாமிப் பெரியாரவர்களுக்கு வலக்கையொன்றிருந்து இயற்கையுடன்கலந்துவிட்டமாயவரம் தோழர் நடராஜன் அவர்களது பிரிவினைக்கும் தூத்துக்குடி கெ. கெ. பெரியசாமி அவர்களது பிரிவினைக்கும் இம்மகாநாடு ஆழ்ந்த வருத்தப் படுகிறதுதனது வருத்தத்தை அவர்களது குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொளகிறது.

பிரேரேபிப்பவர்:- தலைவர்.

2. தற்கால முள்ள சென்னை காங்கரஸ் சரணாகதி மந்திரி சபை தேர்தல் காலத்தில் தேசமகா ஜனங்களுக்கு வரப்போகும் சீர்திருத்தத்தை உடைக்கத்தான் தேர்தலுக்கு நிற்கிறோமென்றும், ஆகையால் காங்கரஸ் அபேக்ஷகர்களுக்கே ஓட்டுப்பொடுங்களென்று ஏமாற்றி பொது மக்களை வஞ்சித்து ஓட்டுக்களைப் பெற்றுக்கொண்டு பெரும்பாலாராய் வந்ததும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு சரணாகதியடைந்து மந்திரி பதவிகளையும் மாதச் சம்பளங்களையும் எற்றுக்கொண்டு அரசியலை நடத்தி வைப்பது முன்னுக்குப்பின் முரணாக இருப்பதாலும் வாக்குறுதிக்கு விரோதமாய் நடந்துகொண்டு வருவதாலும் எலக்ஷன் காலத்தில் ஹிந்தியைப்பற்றி பேசாமல் இருந்துவிட்டு மெஜாரிட்டி தங்களுக்கு கிடைத்துவிட்ட பலத்தில் பதவி பெற்றவுடன் தாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற எதேச்சாதிகாரமாய் ஹிந்தியை கட்டாய பாடமாக்குவதாய் சொல்லுவதாலும் இந்த காங்கரஸ் மந்திரிசபை மீது வடாற்காடுஜில்லாவிலுள்ளபார்ப்பனரல்லாத மக்களுக்கு நம்பிக்கை இல்லையென்றும் உடனே தங்கள் மந்திரி சபையை ராஜினாமா செய்யவேண்டியது அவசியமென்று வற்புறுத்துகிறது.

பி:- ஜி. சாமிநாயுடுகாரு.

ஆ: சி. என். அண்ணாதுரை.

3. சென்னை மாகாணக் காங்கரஸ் மந்திரிசபை பதவி ஏற்ற உடன் ஹிந்தியை கட்டாய பாடமாக்க முயற்சி செய்வதானது இந்த மாகாணத்தில் சுய மொழியாகிய தமிழ் மொழியைக் கொலை செய்வதற்கும் முக்கியமாய் பார்ப்பனரல்லாத மக்களின் கல்விப் பயிற்சியைக் கெடுத்து அவர்களை எந்தவிதத்திலும் முன்னேற்றமடையவிடாமல் இருக்கச் செய்யும்சூழ்ச்சியென்றும் ஹிந்தி மொழி எதற்கும் பயன்படாததும் அதைக் கற்கவேண்டியது தென்னிந்திய மக்களுக்கு எந்த வகையிலும் அவசியம் இல்லை என்றும் இம்மகாநாடு கருதுவதால், ஹிந்திமொழி பயிற்சியை கட்டாயமாக்கக்கூடாது என்று ஆக்ஷேபிப்பதல்லாமல் இதில் தலையிட்டு வேண்டுவன செய்ய காருண்ய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்ளுகிறது; ஹிந்தி மொழிக் கட்டாய பாடமாக்குவதைத் தமிழ்நாடு முழுவதுமுள்ள தமிழ் மக்களெல்லாம் எதிர்த்துப் போராடவேண்டுமென்று தமிழ் மக்களையும் கேட்டுக்கொள்ளுகிறது.

பிரே:- சி. என். சுகானந்தம்.

ஆமோ:- பண்டித திருஞான சம்பந்தம்.

4. ஹிந்திமொழி புகுத்தி அதன் வழி செத்தொழிந்த சமஸ்கிருதத்தை உயிர்ப்பிக்கச் செய்யும் சூழ்ச்சியைத் தெரிந்து தமிழ் மக்கள் நலம் நாடி தமிழ் மொழி வளர்ச்சியைக் குறித்து ஹிந்தி மொழி கட்டாயத்தை எதிர்த்து வரும் தமிழறிஞர்களை "அறிவிலிகள்" என்று ஆணவமாய்த் தமது ஸ்தானத்துப் பொறுப்பையும் கருதாமல் இழித்துப் பேசிய பேச்சைத் திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டுமாயும் அதற்காக வெளிப்படையாக மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் சென்னை சரணாகதி மந்திரிசபைத் தலைவர் கனம் ராஜகோபாலாச்சாரியாரை இம்மகாநாடு எச்சரிக்கை செய்கிறது.

பி:- கே. எம். பாலசுப்பிரமணியம்.

ஆமோ:- சாமி அருணகிரிநாதர்.

5. வரி செலுத்தும் பெரும்பான்மையான குடி மக்களுக்கு சமஸ்கிருதத்தினால் ஒரு நன்மையுமில்லாததால் சம்ஸ்கிருத மொழிக்கு அதிக சலுகை காட்டக்கூடாதென்றுசென்னை கவர்னர் துரை அவர்களை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

6. மாகாண சுயமரியாதை மகாநாட்டை கூடிய சீக்கிரம் கூட்டி கட்சித்திட்டம் வகுத்து தமிழ்நாடு முழுவதும் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்பிப்பார்ப்பனக்கொடுமையை அகற்றத் துரிதமாய்ப் பணியாற்றுமாறு இயக்கத் தலைவர்களைக் கேட்டுக் கொள்ளுவதுடன் அம்மகாநாட்டுக்கு வடாற்காடு ஜில்லாவிலுள்ள ஜஸ்டிஸ் சுயமரியாதை அன்பர்கள் தங்களால் இயன்ற துணை யனைத்தையும் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறது.

7. தாழ்த்தப்பட்ட மக்களுக்குக்கூட்டுத்தொகுதியில் சரியான பிரதிநிதித்துவம் வாய்ந்த தலைவர்கள் அங்கம் வகிக்க முடியாமலிருப்பதால் தனித்தொகுதி முறையை அளிக்கும்படி மாகாண கவர்னர் அவர்களை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

8 தமிழ்மொழியின்வளர்ச்சி நாடியும் தமிழர் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் ஹிந்திமொழி தந்திரத்தை எதிர்த்துப் போராடும் தமிழ் வீரமக்களான எஸ். எஸ். பாரதி, உமாமகேசுவரன் பிள்ளை, கருவூர் அறிவுதயக் கழகத் தலைவர் சி. சிவானந்த அடிகளையும் கெ. எ. பி. விசுவநாதம் அவர்களையும் இம்மகாநாடுபாராட்டுகிறது.

9. தமிழர் நலம், தமிழ் மொழி வளம், தன்மானம் (சுயமரியாதை உணர்ச்சி) கொண்டு பார்பனர்கள் கொடுமைகளையும் சூழ்ச்சிகளையும் விளக்கி விளக்கி எழுதி நாள்தோறும் போராடி தமிழ் மக்களுக்கு உணர்ச்சியும் உரிமையும் ஊட்டி வரும் இயக்கச் செய்தித்தாள்களான "விடுதலை" "குடிஅரசு" "நகாதூதன்," "அறிவுக்கொடி," "ஸைபுல்இஸ்லாம்" "பகுத்தறிவு" முதலியதாள்களைஒவ்வொருதமி தமிழ் மகனும் தமிழ்மகளும் தவறாது வாங்கி ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது

பி:-வி. எஸ். விசுவநாதம்

ஆமோ:-கவிநயம் கந்தசாமி

ஆத:-வாலே அப்துல் ரஷீத்

10. சென்னை சட்டசபையில் வந்தேமாதரம் கீதம் பாடுவது நம் மாகாணத்திலுள்ள ஒரு வகுப்பாரின் மத உணர்ச்சி புண்படுவதாக இருப்பதால் அதை சட்டசபையில் பாடாமலிருக்கும்படி எச்சரிக்கிறது.

பிரே:- கெ.பி.எம்.ஐ. சர்மா.

ஆமோ:- சுவாமி சண்முகானந்தம்.

ஆதரிப்:- வாலேஅப்துல்ரஷித்.

11. காந்தியாரின்வார்தாகல்வித்திட்டம்பிராமணரல்லாதாரின் கல்வி முன்னேற்றத்திற்கு பெரிய முட்டுக்கட்டையாகி, கேடாக முடியும். ஆகவே, பொது மக்கள் இந்த திட்டத்தைக் கண்டிப்பதுடன் எச்சரிக்கையாக இருந்து அதை அமுலில் வரச் செய்யாதபடி பார்த்துக் கொள்ள கேட்டுக் கொள்கிறது.

பி:- ஈ. வெ. ராமசாமி.

ஆமோ:- அண்ணல்தங்கோ.

ஆத:- எஸ். வி. லிங்கம்.

பின் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஒரு தீர்மானத்தின் மீது பேசும் போது காங்கிரஸ் மந்திரிகளாலும், காந்தியாலும் நடக்கும் கெடுதிகளையும், அதனால் பார்ப்பனரல்லதாரகளுக்கு நேரும் ஆபத்துக்களை பற்றி மிக உணர்ச்சி ததும்ப பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் லிங்கம் அவர்கள் நன்றி கூற இரவு 8 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

நாடகம்.

இரவு 8 மணிக்கு சாப்பாடு முடிந்தது

முன்பே விளம்பரம் செய்யப்பட்டிருந்த "தீண்டாதார் யார்" என்ற சீர்திருத்த நாடகம் அன்று இரவு 9-30 மணிக்கு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்நாடகத்திற்கு சுமார் 1500 பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் "நாடகம் எப்படி நடத்தப்பட வேண்டும்?" என்பதைப்பற்றி இரவு 2 மணி முதல் 3 மணி வரை மிகவும் விளக்கமாகப் பேசினார்.

பின் நாடகம் இனிது முடிந்தது. நாடகத்துக்கு நல்ல பணம் வசூலாயிற்று.

---

## ஓமலூர் சுயமரியாதை மகாநாடு.

ஓமலூர், டிச. 1.

மகாநாட்டின் தலைவர்களுக்கு கடிதப்பேக்குவாத்துநடந்துவருகிறது.

மகாநாட்டிற்குவிஜயம்செய்து சிறப்பிக்கும்படி இயக்கப்பெரியார் தோழர் ஈ. வெ. ரா. தோழர்கள் கி. ஆ. பெ. விஸ்வநாதம், பொன்னம்பலனார். டி, என். ராமன், ஏ. ரத்தினசபாபதி, எஸ். வி.லிங்கம்,ஜகதீசன், ராஜாராமலிங்கம், சித்தையன் ஆகிய தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மகாநாட்டின்நன்கொடைவசூலிக்க தோழர்கள் டி. ஏ. மாரிமுத்து, எஸ். ராஜகோபால், வி. சாமிநாதன், எஸ். கே, கந்தசாமி ஆகியவர்கள் சுற்றுப் பிரயாணம்செய்வார்கள். ஆங்காங்குள்ள தோழர்கள் தாராளமாய் உதவி மகாநாடுசிறப்பாய்நடைபெற ஆதரவளிக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மகாநாட்டின் இடம் காலம் யாவும் பின் அறிவிக்கப்படும்.

டி, ஏ. மாரிமுத்து.
கே. ஜெயராம்.
விளம்பர அதிகாரிகள்.

---

## மைசூர் காங்கரஸ் தலைவர் கைது.

பெங்ளூர், நவ. 30

மைசூர் ஜில்லா காங்கரஸ் கமிட்டித் தலைவரான தோழர் ரங்காமய்யா ராஜதுவேஷக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.